School counselling service
Information for parents and carers

# பாடசாலை அளிக்கும் அறிவுரையாலோசனை சேவை

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

பாடசாலை அறிவுரையாலோசனை சேவையின் ஊடாகக் கிடைக்கும் உளவியல் ரீதியான ஆதரவுதவியை அணுகிப் பெறும் வசதி அனைத்து NSW அரச பாடசாலைகளுக்கும் உள்ளது.

பாலர் பள்ளியில் இருந்து 'ஆண்டு 12' வரைக்குமான வகுப்புகளில் பயிலும் மாணவ-மாணவியருக்கான அறிவுரையாலோசனை, உளவியல் மதிப்பீடு மற்றும் தலையீட்டு ஆதரவுதவி சேவைகளை அளிக்கும் பாடசாலை அறிவுரையாலோசகர்கள் மற்றும் பாடசாலை உளவியலாளர்கள் பாடசாலையினது அறிவுரையாலோசகர் சேவையில் உள்ளடங்குவர். மாணவ-மாணவியரது கல்வி, மனநலம் மற்றும் பொதுநலத் தேவைகளில் ஆதரவுதவியளிக்கவும், பாதுகாப்பான, ஆரோக்கியமான, மற்றும் உதவிகரமான கற்றல் சூழல்களை உருவாக்குவதற்குமென அவர்கள் குடும்பத்தினருடனும், பாடசாலை ஊழியர்களுடனும், இதர தொழில்சார் வல்லுநர்களுடனும் இணைவாய்ப் பணியாற்றுவர்.

பாடசாலையைச் சேர்ந்த அனைத்து அறிவுரையாலோசனைப் பணியாளர்களும் உளவியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள். இளவயதினர் கல்விரீதியாகவும், சமூகரீதியாகவும், நடத்தைமுறைகளிலும், உணர்வுரீதியாகவும் வெற்றிபெற மனநலம், கற்றல் மற்றும் நடத்தைமுறைகளில் தமக்குள்ள நிபுணத்துவத்தினை அறிவுரையாலோசனைப் பணியாளர்கள் பயன்படுத்துவர்.

பாடசாலை அறிவுரையாலோசகர் அல்லது உளவியலாளரால்:

- மாணவ-மாணவியருக்கு அறிவுரையாலோசனை அளிக்க இயலும்
- மாணவ-மாணவியரது கல்வி மற்றும் மனநலத் தேவைகளை மதிப்பிட இயலும்
- ஆசிரியர்களுடனும், சிறப்புத்துவ ஊழியர்களுடனும் ஒத்துழைப்பாய்ப் பணியாற்ற இயலும்
- தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் மனநலத் தேவைகளை விளங்கிக்கொண்டு அவற்றை நிர்வகிக்க குடும்பங்களுக்கு உதவ இயலும்
- தனிப்பட்ட மாணவ-மாணவியருக்கான ஒருங்கிணைக்கப்பட்ட, பாடசாலை நேரத்திற்கு முன்பும் பின்பும் கிடைக்கும் ஆதரவுதவிகளை அளிக்க வெளிப்புற முகமைகளுடனும், மனநலத் தொழிலர்களுடனும் இணைந்து பணியாற்ற இயலும்.

மாணவ-மாணவியருடனும், பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்களுடனும், ஆசிரியர்களுடனும் பணியாற்றும் பொழுது தாம் பணியாற்றும் விதத்தைப் பற்றிப் பாடசாலை அறிவுரையாலோசகர்கள் விளக்கிச் சொல்வதோடு, தம்மிடம் சொல்லப்படும் விடயங்களை கவனமாகச் செவிமடுத்துக் கேட்பர் மற்றும் விருப்பத்தெரிவுகளைத் தெளிவுபடுத்தவும் அறிவார்ந்த முடிவுகளை மேற்கொள்ளவும் அவர்கள் உதவுவர்.

## அந்தரங்கத்தன்மை

பாடசாலை அறிவுரையாலோசகப் பணியாளர்கள் கட்டாயப்படுத்தலில்லாததும் அந்தரங்கத்தன்மை கொண்டதுமான உளவியல்ரீதியான ஆதரவுதவிகளை மாணவ-மாணவியருக்கு அளிப்பர். மாணவ-மாணவியர், பெற்றோர் அல்லது பராமரிப்பாளரது அனுமதியில்லாமலோ, சட்டத்தினால் வேண்டப்படாத தருணங்களிலோ, பாதுகாப்பு அல்லது பொதுநலத்திற்குப் பாரதூரமான ஆபத்து இல்லாத நேரங்களிலோ அந்தரங்கத் தகவல்கள் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படாது.

## பரிந்துரைகள்

பாடசாலைக் கற்றல் மற்றும் பொதுநல அணியினருடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில் பாடசாலை அறிவுரையாலோசனைக்கான முந்துரிமைகள் தீர்மானிக்கப்படும். தமது பிள்ளையின் கற்றல், மனநலம் மற்றும்/அல்லது பொதுநலனைப் பற்றிக் கவலைப்படும் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் பாடசாலையுடன் தொடர்புகொண்டு சந்திப்புவேளை ஒன்று வேண்டுமெனக் கேட்கலாம். மாணவ-மாணவியரும் தம்மைத் தாமே பரிந்துரைத்துக்கொள்ளலாம், அல்லது சந்திப்புவேளை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்காக பெற்றோர்கள் அல்லது பாடசாலைப் பணியாளர்களிடமிருந்து உதவி நாடலாம்.

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுக்கு இன்னும் தகவல்கள் தேவைப்பட்டால், தயவுசெய்து பாடசாலையை அழையுங்கள். உங்களுடைய விசாரிப்பில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால் தயவு செய்து 131 450-இல் 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'யினை அழைத்து உங்களுடைய மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள்

நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி இலக்கத்தினைத் தொலைபேசி இயக்குநருக்குத் தாருங்கள், அதையடுத்து உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.